
# மலர் வகுப்பு
# ஆசிரியர் கையேடு

நான்கு
அகவையுடைய
மழலைகளுக்கான
பாடத்திட்டம்



அன்புடையீர்,

வணக்கம். நான்கு அகவையுடைய மழலைகளுக்கான பாடத்திட்டம் இது. மொட்டு வகுப்பின் தொடர்ச்சியாக இந்த மலர் வகுப்பு ஆசிரியர் கையேடானது வெளியிடப்படுகிறது.

இந்தப் பாடங்களை ஆக்குவதற்கு ஒத்துழைத்த பல்லடம் முத்துக்குமரனார், புதுச்சேரி திருமுருகனார், புதுச்சேரி ம.இல.தங்கப்பா, சென்னை இறைக்குருவனார், சூலூர் செந்தலை கௌதமன் ஆகிய அறிஞர் பெருமக்கள் வணங்குதற்குரியவர்கள்.

இந்த ஆசிரியர் கையேடானது முதல் வகுப்புக் கற்றல் திறன்களுக்கான அடித்தளமாகவும், தாÖத்தமிழ்ப் பள்ளிகளுக்கே உரிய ஊக்கப்பாடல்கள், தெளிதமிழ்ச்சொற்கள், கைவேலை, புலப்பயிற்சி, விளையாட்டு, கதைகூறல், நடிப்பு, கலைபண்பாடு, கையெழுத்துப் பயிற்சி என்கிற அணுகுமுறைக்கு வழிஅமைப்பதாகவும் உள்ளன. அனைத்துப் பாடங்களும் உளவியல் நோக்கில் வரிசை படுத்தப்பட்டு மாத வாரியாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மழலைச் செல்வங்கள் நெஞ்சுநிமிர்வோடு, தமிழ்ச் சான்றோர்களாக வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்ற நோக்கில்தான் இந்தப் பாடத்திட்டங்கள் முறைபடுத்தப்பட்டுள்ளன. இந்த நோக்கில் மலர் வகுப்பிற்குரிய (4 அகவைக்குரிய) வேறு கருத்துருக்கள் இருந்தால் அருள்கூர்ந்து தொடர்பு கொள்ளவும். சுமையில்லாத, தரமான கல்வியின் வழியாகத் தமிழ் நாற்றுகளை வளர்த்தெடுக்கத் தமிழ்வழிப் பள்ளி ஆசிரியர்கள் பணியாற்றுவார்களாக.

அன்புடன்,

தமிழ்க்கனல்
1. சம்பத்நகர், சூளேசுவரன்பட்டி, பொள்ளாச்சி. 642006
web: www.thamizham.net email: pollachinasan@gmail.com
mobile : 97885 52061 - 98420 02957 Phone: (04259) 221278

# மலர் வகுப்பு

மலர் வகுப்பு என்பது 4 அகவை முதல் 5 அகவைக்குக் கீழுள்ள மாணவர்களுக்கான வகுப்பு ஆகும். இந்த வகுப்பிற்கு வரும் மாணவர்கள் இரு வகையினர்.........

1. நேரடியாக மலர் வகுப்பிற்கு வருபவர்கள்.
2. மொட்டு வகுப்பைத் தாய்த்தமிழ்த் தொடக்கப்பள்ளியில் முடித்த பிறகு மலர் வகுப்பிற்கு வருபவர்கள்.

நேரடியாக மலர் வகுப்பிற்கு வருபவர்களுக்குத் தாய்த்தமிழ்த் தொடக்கப்பள்ளியின் நடைமுறையும்,பயிற்றுவித்தலும், அணுகுமுறையும் தெரியவாய்ப்பில்லை. இவ்வாறு வரும் புதியவர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையில்தான் இருப்பார்கள். இவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு இரண்டு அல்லது மூன்று குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவும். ஒவ்வொரு குழுவிலும் புதியவர்களை இணைத்துக் கொண்டு மொட்டுவகுப்பிற்கான பாடப்பயிற்சிகளை மீள்பார்வை செ-யவேண்டும். முதல் ஒருமாதத்திற்குச் சோர்க்கை நடைபெறுவதால், புதிய மாணவர்களின் பொருந்தாமை முழுமையான கற்றலுக்குத் தடையாக இருக்கும். இந்தச் சூழலில் குழுச்செயற்பாடுகளின் வழி நடைபெறுகிற மீள்பார்வை அனைத்து மாணவர்களையும் ஊக்கத்துடன் இயங்கவைக்கும். இதன்வழி பழைய மாணவர்கள் மறந்து போனவற்றை நினைவுபடுத்திக் கொள்ளவும், புதிய மாணவர்களுக்கு ஒரு மேலோட்டமான மொட்டு வகுப்புப் பாடம் கிடைக்கவும் வாய்ப்பாக இருக்கும்.

## மலர் வகுப்பிற்கான அடிப்படையாக மாணவர்களுக்கு என்ன தெரிந்திருக்கவேண்டும்?

1. துணிச்சலாகப் பேசுவது, பாடுவது, தன் கருத்தைக் கூறுவது.
2. ஊக்கப்பாடல்கள், தெளிதமிழ்ச் சொற்கள், மதிப்புறவுச் சொற்கள், புலப்பயிற்சி.
3. எழுத்து எழுதுவது, படிப்பது (ட,ப,ம,ய,ர,ழ, ட்,ப்,ம்,ய்,ர்,ழ், டா,பா,மா,யா,ரா,ழா)
4. எண் சொல்லுவது (1 முதல் 50 வரை), எண் எழுதுவது (1 முதல் 20 வரை)

புதிய மாணவர்கள் என்ன செய்கிறார்கள்? எவற்றையெல்லாம் விரும்புகிறார்கள்? எப்படி அவர்களை அணுகுவது? என்பனவற்றை மலர் வகுப்பு ஆசிரியர், மொட்டுவகுப்பில் கண்டறிந்தது போல, இந்த ஒருமாத இடைவெளிக்குள் கண்டறிந்து கொள்ளவேண்டும்.

பழைய மாணவர்களிடமிருந்து புதிய மாணவர்கள் அதிகமாகக் கற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. எனவே மலர் வகுப்பு ஆசிரியர் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துக்கொண்டு, குழுச்செயற்பாடுகளைக் கொடுத்து, நண்பர்களிடமிருத்து கற்றலை, குழுக் கற்றலை ஊக்குவிக்கலாம்.

ஒரு மாதத்திற்குப் பிறகு மலர் வகுப்பிற்கான பாடங்களைத் தொடரலாம்.

## சூன்

மாணவர்களைக் குழுவாக விளையாட வைத்தல். குழுக்கற்றலை ஊக்குவித்தல். மாணவர்கள் மொட்டு வகுப்பில் கற்ற மதிப்புறவுச் சொற்கள், ஊக்கப்பாடல்கள், தெளிதமிழ்ச் சொற்கள் போன்றவற்றை மீள்பார்வை செய்தல்.

மொட்டு வகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுகளை மாணவர்களுக்குப் பயிற்சி தர, மாணவர்கள் அனைவரும் மகிழ்வோடு விளையாடுவார்கள்.

### 1. ஊக்கப்பாடல்

1.

அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா
பாதிப்பழம் உன்னிடம்
பாதிப்பழம் என்னிடம்
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்துத் தின்னலாம்.

( பாடல்களைப் பாடி முடித்ததும், பாடல் தொடர்புடைய வினாக்கள் கேட்கவேண்டும். எடுத்துக்காட்டாக - அணிலைப் பார்த்திருக்கிறாயா? அணில் எந்த மரத்தின்மீது ஏறியது? கொய்யாப் பழம் எப்படி இருந்தது? அணில் எடுத்துக்கொண்ட பழம் எந்த அளவு? பழத்தை அணில் எப்படித் தின்றது? என்பன போன்ற வினாக்களை நெருக்குதலில்லாது, இயல்பாக, மகிழ்வாகக் கேட்கவேண்டும். வினாக்கள் கேட்பதன் நோக்கமே பாடலை மனப்பாடமாகப் பாடி ஒப்புவிக்காமல், பாடப்படுகிற பாடலின் பொருள் உணர்ந்து பாடுவதற்காகவே. 4 அகவையுடைய மாணவர்கள் நிறையத் தெரிந்து கொள்ள விரும்புவார்கள். "இது என்ன? அது என்ன?" என்று கேட்டுக் கொண்டே இருப்பார்கள். வினாக்கேட்டல் அவர்களுக்கு மகிழ்வுதரும்)

## சூலை

### 1. ஊக்கப்பாடல்கள்

2.

தோ... தோ... நாய்க்குட்டி
துள்ளி வா வா நாய்க்குட்டி
உன்னைத்தானே நாய்க்குட்டி
ஓடி வா வா நாய்க்குட்டி
கழுத்தில் மணியைக் கட்டுவேன்
கறியும் சோறும் போடுவேன்
இரவில் இங்கே தங்கிடு
எங்கள் வீட்டைக் காத்திடு.

3.
ஊஞ்சல் அழகு ஊஞ்சலாம்
உயர்ந்து தாழும் ஊஞ்சலாம்
இறக்கை இன்றி வானிலே
எடுத்துச் செல்லும் ஊஞ்சலாம்
உந்தி உந்தி ஆட்டினால்
உயர உயரப் போகுமாம்
ஊக்கம் உள்ள மந்தரே
உயர்வு காண்பர் வாழ்விலே.

## 2. தெளிதமிழ்ச் சொற்கள்

(மொட்டு வகுப்பில் 45 தெளிதமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்தி இருந்தோம்)

| | |
|---|---|
| மிதிவண்டித் தொடரி அறுந்துவிட்டது | ( Cycle chain ) |
| தானியங்கியில் விரைவாக வந்தோம் | ( Auto ) |
| துள்ளுந்தின் வண்ணம் அழகாக உள்ளது | ( Scooter ) |
| மகிழுந்து வந்து திரும்பியது | ( Pleasure Car ) |
| மூடுந்தில் பத்து பேர் போகலாம் | ( Van ) |
| வானூர்தியைப் பார்த்திருக்கிறாயா? | ( Aeroplane ) |

## 3. தமிழ்

### மதிப்புறவுச் சொற்கள்.

மொட்டு வகுப்பில் பழக்கப்படுத்தியது போல, மலர் வகுப்பிலும் மதிப்புறவுச் சொற்களையே பயன்படுத்த ஊக்கமூட்டவேண்டும். மாணவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் பொழுது மதிப்புறவுச் சொற்களைப் பயன்படுத்துகிறார்களா என்று கவனிக்க வேண்டும். ஆசிரியர்களும் மதிப்புறவுச் சொற்களையே பயன் படுத்தவேண்டும். புதிய மாணவர்களிடம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மலர் வகுப்பில் அறிமுகப்படுத்த வேண்டிய மதிப்புறவுச் சொற்கள்.

| | | |
|---|---|---|
| வாருங்கள் | உட்காருங்கள் | செல்லுங்கள் |
| சாப்பிடுங்கள் | எடுங்கள் | படியுங்கள் |
| எழுந்திருங்கள் | பாடுங்கள் | திறவுங்கள் |
| எடுத்து வாருங்கள் | கொடுங்கள் | அமருங்கள் |
| ஓடுங்கள் | எழுதுங்கள் | உண்ணுங்கள் |

மதிப்புறவுச் சொற்களைச் சொற்றொடராக (மாலா வாருங்கள், மாலா எடுத்து வாருங்கள், மாலா சாப்பிட வாருங்கள்) ஆக்கிப் பயிற்சிதர, மாணவர்களுக்குள் இச்சொற்கள் பதிந்து அனைத்துச் சூழலிலும் இவ்வகையான மதிப்புறவுச் சொற்களையே பேசவைக்கும். இதுவே நமது பள்ளியின் சிறப்பாகவும் அமையும்.

தமிழ் ஊக்கப்பாடல்

1. க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ, கௌ இசைப்பாடல்.

2. குட்டிக் குரங்கு வருகுது
சுட்டித் தனங்கள் செÖயுது
நெட்டை வாலை நீட்டியே
நெடிய தூரம் தாவுது.

மலையில் கூடி வாழுது
மரங்கள் ஏறி இறங்குது
கிளையை விட்டுக் கிளையிலே
குதித்துத் தாவி மகிழுது.

குரங்கைப் போல குதிப்பது
குழந்தை நமக்கு நல்லதே
குரங்குக் குட்டி போலவே
கூடி ஆடி மகிழுவோம்.

3. குண்டு குண்டாÖ எழுதுவேன்
கோணல் இன்றி எழுதுவேன்
கண்டு மகிழும் வண்ணமே
கன்னித் தமிழில் எழுதுவேன்

முத்து முத்தாÖ எழுதுவேன்
முயற்சி செÖது எழுதுவேன்
பத்து வரிகள் நாளுமே
பயிற்சி செÖது எழுதுவேன்.

நேர்த்தியாக எழுதுவேன்
நிறுத்தி நன்கு எழுதுவேன்
பார்த்தவர்கள் எளிதிலே
படிக்குமாறு எழுதுவேன்.

திருக்குறள். ( பொருளுணர்ந்து கூறச் செÖயவும் )

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (391)
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பதே நட்பு (786)
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று (108)

திருக்குறள்.

மலர் வகுப்பிற்குரிய குறட்பாக்களை ஆசிரியரே மாணவர்களின் ஏற்பிற்குத் தகுந்தவாறு வடிவமைத்துக் கொள்ளலாம். மாணவர்கள் விரைவாகக் கற்றால் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே செல்லலாம். குறட்பாக்களைக் கூறுவதோடு அக்குறட்பாக்களுக்குரிய பொருளையும் கூறும்படி செÖயவேண்டும். குறளோடு தொடர்புடைய சிறுகதைகளைக் கூறினால் மாணவர்கள் மகிழ்வோடு கற்பார்கள். ஒவ்வொரு மாதமும் மூன்று குறட்பாக்களைக் கற்பிக்கவும். ஒவ்வொரு மாதமும் மூன்று திருக்குறளைத் தெளிவாகக் கற்பித்தால் போதுமானது.

### 4. கணக்கு

ஒன்றும் ஒன்றும் இரண்டு
இரண்டும் ஒன்றும் மூன்று
மூன்றும் ஒன்றும் நான்கு.... இப்படிப்
பத்து வரையிலான வாÖபாட்டுப் பாடல்களைப் பயிற்றுவிக்கவும்.

| | | |
|---|---|---|
| எழுதுதல், படித்தல் | : | 1 லிருந்து 50 வரை |
| சொல்லுதல் | : | 1 லிருந்து 100 வரை |

### 5. சூழலியல்

பாடல்

கண் இரண்டால் பார்க்கலாம்
காது இரண்டால் கேட்கலாம்
கை இரண்டால் செÖயலாம்
கால் இரண்டால் நடக்கலாம்
மூக்கு ஒன்றால் முகரலாம்
முகம் ஒன்றால் மலரலாம்
வாÖ ஒன்றால் பேசலாம்
வளர நாளும் படிக்கலாம்.

பள்ளிச் சூழலைச் சுற்றியுள்ள மரம், செடி, கொடி, பறவை, விலங்கு ஆகியவற்றின் பெயர், அமைப்பு, அமைவிடம் போன்ற கருத்துருக்களை விளையாட்டு வழியில் அறிமுகப்படுத்தலாம். ஒற்றுமை, வேற்றுமைகளையும் அறிமுகப்படுத்தலாம்.

### 6. விளையாட்டு

எளிய உடற்பயிற்சி. கை, கால் அசைவுகள், குனிந்து நிமிர்தல் போன்றவைகள்.
வளைகோட்டில் நடத்தல், ஓடுதல், உட்காருதல்.
வளைகோட்டில் ஓடிக்கொண்டிருக்கும் பொழுது, ஒலி கேட்டால் நிற்றல்,
உட்காருதல் அல்லது கை கால்களை அசைத்தல்.

## 7. நடிப்பு

மாணவர்களை இயல்பாகப் பேசவைக்கவேண்டும். பொதுவாக அதிகம் பேசாத மாணவர்களிடம் அன்பாக முகவரி கேட்டு, உறவினர்களைப் பற்றிக் கேட்டு, அவர்கள் எப்படிப் பேசுவார்கள்? என்ன பேசுவார்கள்? எனக்கேட்டு பேசவைக்கவேண்டும். அவர்கள் பேசத் தொடங்கியதும், எப்படி ஏற்ற இறக்கத்துடன் பேசவேண்டும் எனப் பயிற்றுவிக்க வேண்டும். மாணவர்களது சூழலில் நடக்கும் நடப்புகளை, பார்த்த நிகழ்வுகளை, குரலில் ஏற்ற இறக்கத்துடன் சொல்லச் செய்யவேண்டும். கை, கால், உடல் அசைவுகளுடனும் குரலில் ஏற்ற இறக்கத்துடனும் சொல்லப் பயிற்றுவிக்கும் பொழுது அதுவே நடிப்பிற்கான அடித்தளமாக இருந்து மாணவர்களை வளர்த்தெடுக்கும்.

முகமூடி அணிந்து விலங்குகள் போல நடித்தல்
தேநீர் போடுவது போல நடித்தல்
படகோட்டுவது போல நடித்தல்

## 8. கதை கூறல்

இக்கதைகள் மாணவர்கள் படிப்பதற்கல்ல. இக்கதைகளை ஆசிரியர்கள் படித்து உணர்ந்து உள்வாங்கிக் கொண்டு, தங்களது கதைகூறும் ஆற்றலுக்கு ஏற்றவாறு சுவையாக, மாணவர்கள் ஈர்ப்புடன் கவனிக்கும்படியாக, தேவையானால் புதிய செயற்பாடுகளை இணைத்துக் கொண்டு, உயிர்த்துடிப்போடு இக்கதைகளைக் கூறவேண்டும். கதையின் சூழலுக்குத் தகுந்தவாறு பலவகையான ஒலியெழுப்பியும், மாணவர்களை ஒலியெழுப்ப வைத்தும் கதைக்குச் சுவைகூட்டலாம். மாணவர்கள் வியப்போடு கேட்கும்படியாகக் கூறவேண்டும். இன்றைய சூழலில் பாட்டியின் மடியில் அமர்ந்து கதைகேட்கும் நிலையானது இல்லாமையால்தான் இக்கதைப்பகுதியானது இங்கே தரப்பட்டுள்ளது.

### மழலைகளுக்குரிய கதைகள் எப்படி இருக்கவேண்டும்?

1. நிகழ்வுகளில் குழப்பமில்லாமல், மாணவர்களுக்குத் தெரிந்த சூழலை, தெரிந்த கதை மாந்தரை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.
2. மூன்று அல்லது நான்கு கதைமாந்தர்களுக்கு மிகாமல் கதை இருக்கவேண்டும்.
3. கதைகள் உரையாடலுக்கு வாய்ப்புடையனவாகவும், நடிப்பதற்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும்.
4. மாயமந்திரங்களோ, புராணக்கற்பனைகளோ அற்றவையாக இருக்கவேண்டும்.
5. கதையின் முடிவு இயல்பானதாக இருந்து, மாணவர்களை ஊக்கப்படுத்தி செயற்பட வைப்பதாக இருக்கவேண்டும்.
6. கதைகள் பகுத்தறிவுக்கு உட்பட்டனவாக இருந்து, சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும்.
7. கதைகளின்வழி மாணவர்கள் புதிய அறிவியல் நுட்பமோ, புதிய செயலோ, தமிழ் மொழிக்கான பெருமித உணர்வோ அடைவதாக இருக்கவேண்டும்.
8. கதைகளில் மாணவர்கள் ஒலியெழுப்ப வாய்ப்பிருக்கவேண்டும்.

9. கதைகள் அடிமைத் தனத்தை ஞாயப்படுத்துவதாக இருக்கக்கூடாது.
10. கதைகள் அயற்சொற்கள் உடையனவாக இருக்கக்கூடாது.
11. கதைகள் அச்சமூட்டுவனவாக இருக்கக்கூடாது.
12. ஒரு கதையில் ஒரே வகையான இரு கதைமாந்தர்கள் வருவதாக இருக்கக்கூடாது.
13. கதைகளுக்குள் உட்கதைகள் வந்து குழப்புவதாக இருக்கக்கூடாது.
14. சாதிமதக் குறியீடுகள் கதைகளுக்குள் வரக்கூடாது.

கதை எண் : 1 அந்தக் காட்டில் ஒரு பூனை வாழ்ந்து வந்தது. அது ஒருநாள் அருகிலுள்ள வீட்டிற்குச் சென்றது. அங்குக்கீழே கிடந்த அப்பத்தை எடுத்து வந்தது. வரும் வழியில் தன் நண்பனைச் சந்தித்தது. நண்பனுக்கு அப்பத்தில் சரிபாதி கொடுப்பதாகக்கூறி அப்பத்தைப் பிÖக்கத் தொடங்கியது. அதற்கு நண்பன் பூனை, குரங்கு அரசரிடம் சென்று சரிபாதியாகப் பங்கிட்டுக் கொள்வோம் என்று சொன்னது. இரண்டு பூனைகளும் குரங்கு அரசரிடம் வந்தன.

குரங்கு அப்பத்தை வாங்கி இரண்டாகப் பிÖத்துத் தராசில் வைத்து நிறுத்தது. தராசின் ஒரு தட்டுக் கீழே இருந்தது. உடனே குரங்கு இழுத்த தட்டில் உள்ள அப்பத்தைப் பிÖத்துத் தன் வாயில் போட்டது. பூனைகள் இரண்டும் வினாக்குறியோடு குரங்கைப் பார்த்தன. குரங்கு எதைப் பற்றியும் கவலைப்படாமல் அடுத்த தட்டில்உள்ள அப்பத்தைப் பிÖத்தது. உடனே நண்பன் பூனை இப்ப நீங்க பிÖத்த துண்டை இரண்டு துண்டாக்கி இரண்டு தட்டிலும் போடுங்க என்று சொன்னது. குரங்குக்கு உடனே கோபம் வந்து விட்டது. இங்கே நான் நடுவரா? இல்லை நீ நடுவரா? என்று சீற்றத்துடன் கூறியது. அதற்கு நண்பன் பூனை அன்போடு நீங்கள் தான் நடுவர். ஆனால் அப்பம் எங்களுடையது அதனால்தான் சொன்னேன் என்றது.

குரங்கு வேண்டா வெறுப்போடு சமமாகப் பிÖத்து இரண்டு தட்டிலும் போட்டது. தராசைத் தூக்கிப் பார்த்தால் இரண்டும் சமமாக இருந்தன. உடனே இரண்டு பூனைகளும் துள்ளிக் குதித்து வந்தன. இந்தப்பாதி எனக்கு, இந்தப்பாதி உனக்கு என்று இரண்டும் அப்பத்தை எடுத்து வாயில் போட்டுத் தின்றன. பிறகு.........

இரண்டு பூனைகளும் வெளியே வந்தன. நண்பன் பூனை சொன்னது. இங்கே பார். இந்த அரசருக்குத் திருட்டுப்புத்தி. நாம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தால், நமது அப்பம் முழுவதையும் அவரே தின்று ஏப்பம் விட்டிருப்பார். அரசர் தவறு செÖகிறார் என்றால் நாம் அதைத் தட்டிக் கேட்கவேண்டும். அப்போதுதான் அரசர் திருந்துவார். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் கடைசியில் ஏமாறுவது நாம்தான் என்றது பூனை.

### 9. கைவேலை

கைநெகிழ்வுப் பயிற்சி. மணலில் வீடு, கோபுரம் அமைத்தல்.
மணலில் விரும்பிய உருவங்கள் செÖதல்.

### 10. புலப்பயிற்சி

அடிப்படை வண்ணமான நீலம், மஞ்சள், சிவப்பு ஆகிய மூன்று வண்ணங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைத்து அதனால் வரும் புதிய வண்ணத்தை அறிமுகப்படுத்துதல்

பொருள்களை உற்றுநோக்கி அடையாளம் காணவைத்து அதைப்பற்றிக் கூறவைத்தல்.

### 11. கலை பண்பாடு

இன்றைய சூழலில் மறைந்து வருகிற கலை பண்பாட்டுக் கூறுகளை மாணவர்களிடம் விதைத்து வளர்க்க வேண்டியது இன்றியமையாததாகும். எனவே கும்மி, கோலாட்டம், நாட்டியம் போன்றவற்றை எளிய அசைவுகளாக முறைபடுத்திக் கற்பிக்கவேண்டும். அவை அவர்களுக்குள் பதிவதோடு மகிழ்வையும் தரும்.

நூலைப்படி சங்கத்தமிழ் நூலைப்படி
முறைப்படி நூலைப்படி சங்கத்தமிழ் நூலைப்படி
காலையில் படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும் படி (நூலைப்படி)

கற்பவர் கற்கும்படி வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படி
கல்லாதவர் வாழ்வதெப்படி (நூலைப்படி)

பொÖயிலே முக்கால்படி புரட்டிலே கால்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி (நூலைப்படி)

### 12. கையெழுத்துப் பயிற்சி

1 லிருந்து 50 வரை தெளிவாக, உரியவடிவத்துடன், அழகாக எழுதப்பழக்குதல்.

## ஆகஸ்டு

### 1. ஊக்கப் பாடல்கள்

4. கா கா என்னும் காக்கை பார்
கொக் கொக் என்னும் கோழி பார்
குக்கூ என்னும் குயிலைப் பார்
குர்... குர்... என்னும் குரங்கைப் பார்
ஒலிக்கும் ஒலியே பெயராகும்
இதுவே தமிழின் வளமாகும்.

5. பால் பால் என்ன பால்?
மாட்டுப்பால்.
என்ன மாடு? பசு மாடு.
என்ன பசு? நாட்டுப் பசு.
என்ன நாடு? தமிழ் நாடு.
என்ன தமிழ்? செந்தமிழ்.

## 2. தெளி தமிழ்ச் சொற்கள்

ஒலிநாடாவில் பாடல் கேட்டேன் ( Tape)
இன்றைய செÖதித்தாள் படித்தாயா? ( News Paper )
இசைத்தட்டில் பாடல் கேட்கலாம். ( Record )
அஞ்சல் அட்டையில் செÖதி அனுப்புவோம். ( ost card )
கல்நெÖக் கடை விரிவுபடுத்தப்படுகிறது. ( Petrol )

## 3. தமிழ்

ஈற்றசையில் ஒரே ஒலியமைந்த பாடல்

பசிக்கு வேண்டும் சோறு
பயிர் செழிக்க ஆறு
வசிக்க நல்ல வீடு
வாÖ மணக்கப் பாடு
கனி கொடுக்கும் மரம்
கொண்டைக்குப் பூச்சரம்.

மாணவர்கள் எளிதில் படித்துப் புரிந்து கொள்கிற ஏதேனும் மூன்று திருக்குறள்.

பழந்தமிழ்ப் பாடல்

மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
மாற்றானை உறவென்று நம்பவேண்டாம்.
வாயாரப் பொÖயுரைகள் கூறவேண்டாம்.
வஞ்சனைகள் செÖவாரோடு இணங்கவேண்டாம்.

எழுத்து அறிமுகம், எழுத்தை அடையாளம் காணுதல்.

க, ச, த, ங, ந, ற

## 4. கணக்கு

| | | |
|---|---|---|
| எழுதுதல், படித்தல் | : | 1 லிருந்து 50 வரை |
| சொல்லுதல் | : | 1 லிருந்து 100 வரை |

2, 5, 10 வாÖபாடு சொல்லிப் பழகுதல்
( எடுத்துக்காட்டு - இரண்டாம் வாÖபாடு )

ஒரு இரண்டு இரண்டு
இரண்டு இரண்டு நான்கு
மூன்று இரண்டு ஆறு
நான்கு இரண்டு எட்டு
ஐந்து இரண்டு பத்து.

5. சூழ்நிலையியல்

வானில் நீல வண்ணம் பார்
வயலில் பச்சை வண்ணம் பார்
பாலில் வெள்ளை வண்ணம் பார்
பவழம் சிவப்பு வண்ணம் பார்
காக்கை கரிய வண்ணம் பார்
ஐந்து வண்ணக் கிளியைப் பார்
ஏழு வண்ண வில்லைப் பார்.

வீடுகளின் வகைகளைப் படத்துடன் விளக்குக.
( கூரை வீடு, ஓட்டு வீடு, சிமெண்ட் (பைஞ்சுதை) வீடு.

6. விளையாட்டு

தலையை முன்னும் பின்னும், பக்கவாட்டில் அசைத்தல்
கண்விழியை மேலே கீழே வட்டமாக அசைத்தல்.
மரம் ஏறுதல், 1 அடி விட்டமுள்ள குழாயில் ஏறுதல்,
எளிய உடற்பயிற்சி ( ஒவ்வொரு நாளும் பாடம் தொடங்குவதற்கு முன்பு )

7. நடிப்பு

பல்வேறு வகையான விலங்குகள் போல நடிக்க வைத்து பிறகு அதன் தொகுப்பாக விலங்குக் காட்சிசாலையாகவும், விலங்கை அழைத்து வருவது போலவும் நடிக்க வைத்தல்.

சென்ற மாதக் கதையான அப்பம் பகிர்ந்த குரங்கு கதையை நடிக்க ஊக்குதல்.

8. கதை கூறல்

பாண்டிய நாட்டில் உள்ள ஊர்களில் பிசிர் என்பதும் ஒன்று. இவ்வூரில் ஆந்தையார் என்னும் புலவர் வாழ்ந்து வந்தார். சோழ நாட்டில் கோப்பெருஞ்சோழன் ஆட்சி செО்து வந்தான். இவன் தன்னேரில்லாத தமிழ் வேந்தன். இவன் தமிழ் மொழியின்மீதும், தமிழ்ப் புலவர்களிடமும் அன்பு செலுத்தியவன். அரண்மனைக்கு வருகிற புலவர்கள் வாயிலாகப் பிசிராந்தையார் பற்றிக் கேட்டறிந்தான். அவர் மீது அளவிடமுடியாத அளவு அன்பு கொண்டான். அரசனின் அன்பை அறிந்த பிசிராந்தையாரும் அரசனிடம் அளவில்லாத அன்பு கொண்டார். அரசனின் வள்ளல் தன்மையையும், தமிழ்ப் புலவர்களை அரவணைக்கிற தன்மையையும் கேட்டறிந்து நட்புக் கொண்டார். ஆனால் இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளவேயில்லை. இருந்தாலும் அவர்களது அன்பு வளர்ந்து கொண்டே இருந்தது.

கோப்பெருஞ்சோழனது ஆண்மக்கள் இருவரும் ஆட்சியதிகாரம் பெற தந்தையின் மீது போர் தொடுக்கவிரும்பினர். கேள்விப்பட்ட சோழன் பெருஞ்சினம் கொண்டு எதிர்த்துப் போர் தொடுத்து மக்களை அழிக்கத் திட்டமிட்டான். இதை அறிந்த அரசவைப் புலவர்கள் சோழ மன்னரைச் சமாதானம் செОதனர். தன் மகன்களே தன்னை எதிர்த்தது கண்ட சோழ மன்னன் மானம் போனதாகக் கருதினான். இனி வாழ்ந்து பயனில்லை என்று, பட்டினிகிடந்து

உயிர் துறக்க முடிவு செய்தான். இதற்கு வடக்கிருத்தல் என்று பெயர். மன்னருடன் நான்கு புலவர்களும் வடக்கிருக்கத் துணிந்தனர். வடக்கிருக்கும் இடத்தில் இறந்தால் புதைப்பதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குழி வெட்டப்பட்டது. அரசன் ஆறாவதாக ஒரு குழியையும் வெட்டச் சொன்னான். அது தனது நண்பர் பிசிராந்தையாருக்காக என்றும் கூறினான். நேரில் பழகாத நண்பரின் மேல் அவ்வளவு நம்பிக்கைக் கொண்டிருந்தான் மன்னன். வடக்கிருக்கும் செய்தி கேட்ட பிசிராந்தையார் அங்கு வந்து தானும் வடக்கிருந்து உயிர் துறந்தார்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

9. கைவேலை

இலப்பம் கொடுத்து விரும்பிய உருவங்கள் ( விலங்குகள், வீட்டில் பயன்படுத்தும் பொருள்கள்) செய்யவைத்தல்.
களிமண் கொடுத்து விரும்பிய உருவங்கள் செய்யவைத்தல்.

சதுரம், முக்கோணம், செவ்வகக் கட்டைகளைக் கொடுத்து ( கட்டைகள் பல்வேறு வண்ணம் உடையதாக இருந்தால் சிறப்பாக இருக்கும்) விரும்பிய வடிவங்கள் வீடு, மேடை, பாலம், கட்டடம், மாடி, வடிவங்கள்) ஆக்கச் செய்தல்

10. புலப்பயிற்சி

மாணவர்கள் வாழுகிற சுற்றுச் சூழலில் உள்ள பொருள்களைத் திரட்டி வரச்செய்யவும். திரட்டிய பொருள்களை அவற்றின் பொதுத் தன்மைகளின் (உயிருள்ளது, உயிரற்றது - பெரியது, சிறியது - வண்ணம் - கடினம், மென்மை - வழவழப்பு, சொரசொரப்பு) அடிப்படையில் வகைப்படுத்த ஊக்குவிக்கவும். வாரம் ஒரு செயல் ஊக்குவித்தால் போதும்.

11. கலை பண்பாடு.

நூலைப்படி பாடலை மீள்பார்வை.

12. கையெழுத்துப் பயிற்சி

க, ச, த, ங, ந, ற

எழுத்துகளை உரிய வடிவங்களுடன், அழகாக எழுதுவதற்குரிய பயிற்சி அளித்தல்.
எழுத்துகளை அழகாக எழுதுவதற்குரிய பயிற்சி

1. எழுத்தின் மீது விரல்களால் விளம்புதல்.
2. எழுத்தின் மீது எழுதுதல்.
3. எழுத்தைப் பார்த்துக்கொண்டு அது போலவே சொல்லிக்கொண்டு எழுதுதல்.
4. எழுத்தைப் பார்க்காமல் உரிய வடிவத்துடன் அழகாக எழுதுதல்.
5. எழுத்தை நாளிதழின் பக்கங்களில் அடையாளம் காணுதல்.

## செப்டம்பர்

### 1. ஊக்கப் பாடல்கள்

6.

மண் அரிப்பைப் காத்திடும்
மழையை நமக்குத் தந்திடும்
உயிரினங்கள் உண்டிட
உயர் கனிகள் தந்திடும்
நிழல் கொடுத்து நின்றிடும்
நிறைய காற்று தந்திடும்
காட்டு மரங்கள் பலவகை
கருத்தாÖ நாமும் வளர்க்கலாம்.

7.

எதற்கும் உண்டு விலை
சிலந்தி பின்னும் வலை
கல்லைச் செதுக்கச் சிலை
ஆடல் பாடல் கலை.

செல்வம் சேர்த்தால் வளம்
உண்மைச் செல்வம் நலம்
மொழியைக் காக்கும் நிலம்
ஒன்றே மாந்தர் குலம்.

### 2. தெளிதமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| அரிமா காட்டின் அரசன் | ( சிங்கம் ) |
| ஓவியம் மனத்தை ஈர்க்கிறது | ( Drawing ) |
| உணவகம் தூÖமையாக உள்ளது | ( Hotel ) |
| மருத்துவர் நோÖ நீக்குகிறார் | ( Doctor ) |

### 3. தமிழ்

ஊக்கப்பாடல்

மாட்டின் வாலோ நெட்டை
ஆட்டின் வாலோ குட்டை
நாயின் வாலோ மேலே
நரியின் வாலோ கீழே
அணிலின் வாலோ கற்றை
எலியின் வாலோ மொட்டை
குரங்கின் வாலோ நீளம்
குருவி வாலோ நீலம்

எழுதுதல், படித்தல், அடையாளம் காணுதல்

க், ச், த், ங், ந், ற் - கா, சா, தா, ஙா, நா, றா

நுண்பொருள் வேறுபாடு. (தமிழின் சொல்வளத்தைக் காட்டக்கூடிய இப்பகுதியை ஆசிரியர்கள் சுவையோடு தமிழ் மொழியின் சொல்வளம் கண்டு பெருமிதம் கொள்ளத்தக்க வகையில் நடத்த வேண்டும்)

விதைத்தோல் வகை.

மெலிதாÖ இருப்பது தொலி
கெட்டியாÖ இருப்பது தோல்
கடினமாÖ இருப்பது தோடு
உடைய மறுப்பது ஓடு
தேங்காயின் மட்டை சிரட்டை.

திருக்குறள். மலர் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்புடையதாக உள்ள ஏதேனும் மூன்று திருக்குறளைப் பொருளுடன், சுவையாகக் கற்பிக்கவும்.

## 4. கணக்கு

ஊக்கப்பாடல்

கரிக்குச்சி தூவல் சுண்ணக்கட்டி
காட்டும் உருளை வடிவம்தான்
கூர்மை செÖத கரிக்குச்சி
கூம்பு வடிவம் காட்டுமே.

கனசதுரக் கட்டையை
கண்டு நானும் அளந்திட
நீள அகல உயரமும்
ஒன்றுபோல இருந்தன.

கனசெவ்வகக் கட்டையை
கண்டு நானும் அளந்திட
உயரம் வேறு பட்டது
உள்ளம் மகிழ்வு கொண்டது.

எண்களை வாÖமொழியாகச் சொல்லுதல்

2, 5, 10 ன் மடங்கை 50 வரை சொல்லுதல்

(2,4,6,8,10,12,14,16,18,20,22,24,26,28,30,32,34,36,38,40,42,44,46,48,50)

(5,10,15,20,25,30,35,40,45,50)

(10,20,30,40,50)

100 ன் மடங்கை 1000 வரை சொல்லுதல்

100, 200, 300, 400, 500, 600, 700, 800, 900, 1000

## 5. சூழ்நிலையியல்

சுவைகள்

இனிப்புச் சுவைக்கு மாம்பழம்
புளிப்புச் சுவைக்கு எலுமிச்சை
உறைப்புச் சுவைக்கு மிளகாயாம்
துவர்ப்புச் சுவைக்கு பாக்குதாம்
உவர்ப்புச் சுவைக்கு உப்புக்கல்
கசப்புச் சுவைக்கு பாகற்காÖ
ஆறு சுவைகள் இவையென்றால்
இவற்றின் கலப்போ ஆயிரமாம்.

## 6. விளையாட்டு

கயிற்றை இரண்டு மரங்களுக்கிடையில் கட்டிவிட்டு கயிற்றைப் பிடித்துத் தொங்கிக்கொண்டு ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு நகருதல்.
கல் அல்லது மரத்தாலான (5 கிலோ) உருளையை கை, கால்களால் உருட்டுதல்.
எளிய உடற்பயிற்சி, மாணவர்கள் விரும்புகிற விளையாட்டு.

## 7. நடிப்பு

விண்வெளி இயந்திர மனிதன் போல தலைக்கவசம் அணிந்து நடத்தல், பேசுதல்.
சென்ற மாதம் கூறிய கோப்பெருஞ்சோழன் கதையை நாடகமாக நடித்தல்.

## 8. கதை கூறல்

தேவநேயப் பாவாணர் சங்கரன்கோயில் ஊரில் ஞானமுத்தருக்கும் பரிபூரணம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். 23 திராவிட மொழிகளை படித்த இலக்கணப் புலவர். இந்தி, சமற்கிருதம், இலத்தீன், உருது, எபிரேயம், சப்பானியம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை பெற்ற சான்றோர். தம் வாழ்நாளெல்லாம் வறுமையின் பிடியிலே வாழ்ந்தவராயினும் தமிழ் மொழிச் செல்வத்தை வாரி வாரி வழங்கிய வள்ளல். எவ்வகைத் தீங்கு நேரினும் உண்மையை எடுத்துச் சொல்வதே ஆராÖச்சியாளனின் கடமை என அஞ்சாநெஞ்சினராÖ வாழ்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர் பணியாற்றியபோது சமற்கிருத மொழியைத் திறனாÖவு செÖதபோது, அவர் தம் பதவியையே பறிபோக நேர்ந்தது. அப்போதும் அவர் “ எனக்கு வறுமையுண்டு மனைவி மக்களுண்டு, அதோடு மானமும் உண்டு ” என்று நெஞ்சுயர்த்திக் கூறியவாறு பணியைத் தூக்கி எறிந்தார்.

(தமிழ் உணர்வாளர்கள் பற்றிய கதையைக் கூறும்பொழுது எப்படித் தமிழுக்காக எதையும் இழக்கத் துணிந்து வாழ்ந்தார்கள் என்பது பதியுமாறு கூறவேண்டும் )

## 9. கை வேலை

மருந்தில்லாத தீக்குச்சிகளைக் கொடுத்து விரும்புகிற வடிவங்களை ஆக்கச்செÖதல். வெண்டைக்காÖ, உருளைக்கிழங்கு, வேறு காÖகள் போன்றவற்றை குறுக்காக வெட்டி, அதனை வண்ணத்தில்தோÖத்துத் தாளில் அச்சடிக்க வைத்தல். அச்சடித்ததை கரிக்கோலால் இணைத்து உருவங்கள் ஆக்கச் செÖதல்.

## 10. புலப்பயிற்சி

வெவ்வேறு வகையான வண்ண மணிகளைக் கொடுத்து அதைக் கோக்கவைத்தல். வண்ணத்தைத் தனித் தனியாகப் பிரித்துக்கொண்டு கம்பியில் ஒவ்வொரு வண்ணமும் சம எண்ணிக்கை உடையதாக எண்ணிக் கோக்கவைத்தல். வண்ணத்தைத் தனித் தனியாகப் பிரித்துக்கொண்டு மெல்லிய நூலில் ஒவ்வொரு வண்ணமும் சம எண்ணிக்கை உடையதாக எண்ணிக் கோக்கவைத்தல்.

## 11. கலை பண்பாடு

குயிலைப் போலக் கூவிப் பார்த்தேன்
கூவ முடிகிறது - நான்
மயிலைப் போல ஆடிப் பார்த்தேன்
ஆட முடிகிறது.

மீனைப் போல நீந்திப் பார்த்தேன்
நீந்த முடிகிறது - நான்
மானைப் போல ஓடிப் பார்த்தேன்
ஓட முடிகிறது.

முடியும் என்று முயன்று பார்த்தேன்
எல்லாம் முடிகிறது - நீயும்
முடியும் என்று முயற்சி செÖதால்
எதுதான் முடியாது?

## 12. கையெழுத்துப் பயிற்சி

க், ச், த், ங், ந், ற் - கா, சா, தா, ஙா, நா, றா

எழுத்துகளை உரிய வடிவத்துடன், அழகாக எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.

செப்டம்பர் இறுதி வாரத்தில் காலாண்டுத் தேர்வு நடைபெறும்

## அக்டோபர்

### 1. ஊக்கப் பாடல்கள்

8.

வேப்பிலையைத் தின்னலாம்
விரும்பித் துளசி தின்னலாம்
காத்திடலாம் உடல்நலம்
கருதித்தின்றால் கேடில்லை
பாகற்காயோ கசப்புத்தான்
பழகிப்போனால் இனிப்புத்தான்
நாவுக்காக வாழாமல்
நலத்துக்காக வாழ்வோமே.

9.

முழங்கின சங்குகள்
முதல்மொழி தமிழ்என
பகர்ந்தன சங்குகள்
பிறமொழி பின்என
மொழிந்தன சங்குகள்
மலர்வது தமிழ்என
ஒலித்தன சங்குகள்
ஒளிமிகு தமிழே...
ஓங்குவதினி என.

### 2. தெளி தமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| பணம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள் | ( Receipt) |
| காரிக் கிழமை விடுமுறைநாள். | ( சனிக்கிழமை ) |
| அறிவன் கிழமை பள்ளி வேலைநாள் | ( புதன்கிழமை ) |
| செந்திலின் பகடி சிரிப்பூட்டுவது | ( தமாஷ் ) |
| பாலம் பழுதாகி உள்ளது | ( Repair) |

### 3. தமிழ்

பறவை பறந்து வந்தது
பட பட வென ஒலித்தது
கசடதபற என்பது போல்
காதில் ஒலியும் கேட்டது.

பறவை பார்த்த பூனையும்
மியாவ் மியாவ் என்றது
பூனை ஒலி எனக்குமே
ஙஞன நமண என்றது

பூனை பார்த்த கிளியாரும்
யார் அவன் என்றது
கிளியின் குரல் எனக்குமே
யரல வழள என்றது

திருக்குறள்

மாணவர்களுக்கு ஏற்புடைய ஏதேனும் 3 குறள்களைக் கற்பிக்கவும்

எழுத்து எழுதுதல், படித்தல், அடையாளம் காணுதல்

**ல, வ, ன, ஞ, ண, ள**

## 4. கணக்கு

கன உருவங்கள் அறிமுகம். 1) கூம்பு 2) உருளை

இடமதிப்பு உணர்த்துதல்

ஒன்று, பத்து இடமதிப்பை ஆணிமணிச்சட்டம், கட்டைகள் பயன்படுத்தி அறிமுகப்படுத்துதல், விளக்குதல், ஆÖவுசெÖதல்.

## 5. சூழ்நிலையியல்

சூரியன் வருவது எதனாலே?
சுழலுது உலகம் அதனாலே.
சந்திரன் தெரிவது எவராலே?
சரியும் கதிரவன் ஒளியாலே.
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணில் படுவன அவை என்ன?
கணக்கில் அடங்கா விண்மீன்கள்
கண்ணில் படுவதை நாமறிவோம்.
பேரிடி மின்னல் எதனாலே?
மோதுது மேகம் அதனாலே.
பெருமழை பெÖவது எதனாலே?
குளிருது மேகம் அதனாலே.
யாரிகற்கெல்லாம் அதிகாரி?
எவரும் இதற்கில்லை அதிகாரி.
எல்லாம் இயல்பாÖ நடக்கிறது
இதைநாம் எண்ணிட வேண்டாமோ?

பொது இடங்கள் வகைகள் அறிமுகம்.

பொது இடங்களான மருத்துவமனை, பேருந்து நிலையம், நாளங்காடி, அஞ்சலகம், காவல் நிலையம் என்பனவற்றுள் ஏதேனும் மூன்று பொது இடங்கள் பற்றிய படங்கள் காட்டி அல்லது நேரில் அழைத்துச் சென்று, அங்கு என்ன நடைபெறுகிறது என்று விளக்கவும். அங்குள்ள பணியாளர்கள், பொருள்கள், பயன்பாடு என்பன பற்றிச் சுவையாக மாணவர்கள் விரும்புகிற வகையில் விளக்கவும். பொது இடங்கள் பற்றிய வினாக்கள் கேட்டு மாணவர்களை உரையாட வைக்கலாம்.

6. விளையாட்டு

மரச் சக்கரம் அல்லது ஊர்திகளின் சக்கரம் கொடுத்து உருட்டச் செÖதல். நேர்கோடு போட்டு சரியாக அந்த நேர்கோட்டின் மீது உருட்டச் செÖதல். வட்டக்கோடு போட்டு அதன் மீது சக்கரத்தை உருட்டச்செÖதல்.

வட்டம் போட்டு அந்த வட்டத்திற்குள் குதித்தல்,
ஓடி வரச்செÖது அவர்களால் இயலுகிற அளவுக்குத் தாண்டுதல்,
தொடர்ந்து குதித்தல், தொடர்ந்து தாண்டுதல்

7. நடிப்பு

மாணவர்களுக்குத் தெரிந்த மாந்தர்கள் போல நடிக்கச் செÖதல்.

8. கதை கூறல்

காட்டிலே திருவிழா. திருவிழாவின் நிகழ்ச்சியாÖ விளையாட்டுப் போட்டிகள் தொடங்கின. முதலில் ஓட்டப்பந்தயம். சிறுத்தைதான் நடுவர். போட்டியில் கலந்து கொள்பவர்கள் முன்வரலாம் என்று அறிவித்தது குரங்கு. அனைத்து விலங்குகளுக்கும் ஒரே மகிழ்ச்சி. பந்தயத்தில் கலந்து கொள்வதைவிட வேடிக்கை பார்ப்பதில்தான் பலருக்கும் மகிழ்ச்சி. யார் போட்டியில் கலந்து கொள்ளப் போகிறவர்கள் என்று நோட்டமிட்டவாறு பல விலங்குகள் முன்வராமல் நின்றன. ஓட்டப் பந்தயத்திற்குக் கடைசி அழைப்பு. “ போட்டியாளர்களே முன் வருக ” என்று மீண்டும் அழைத்தது குரங்கு. ஒருவரும் முன்வரக் காணோம். கடைசியில் ஓர் ஆமை “ நான் வருகிறேன் ” என்று மெல்ல நடந்து பந்தயத்திடலுக்கு வந்தது. அனைத்து விலங்குகளும் அதனைப் பார்த்துக் கேலியாÖச் சிரித்தன.

ஆமையே ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்ளும் பொழுது நான் என்ன மட்டமா? என்று முயல் நினைத்தது. இதோ ஆமையுடன் போட்டி போட நான் வருகிறேன் என்று முழங்கியபடி போட்டித் திடலுக்குக் குதித்து ஓடிவந்தது அந்தக் குட்டி முயல்.

“சரி யாரும் வரவில்லையா? அப்படியானால் போட்டியைத் தொடங்குகிறேன்” என்று அறிவித்தது குரங்கு. முடியாது நான் சம்மதிக்க முடியாது. இந்தப் போட்டியில் நன்னெறி இல்லை என்று எதிர்ப்புத் தெரிவித்தார் சிறுத்தையார். இதில் என்ன எதிர்ப்பு உங்களுக்கு? என்று கேட்டது குரங்கு. நடக்க முடியாத ஆமைக்கு முயல் போட்டியா? இது என்ன ஞாயம் என்று கேட்டார் சிறுத்தையார். ஆமையே ஒத்துக் கொண்ட பின் இடையில் நீர் என்ன? என்று முயல் இடைமறித்தது. நான்தான் போட்டிக்கு நடுவர். இரண்டு சரிநிகரானவர்களுக்கு இடையில்தான் போட்டி நிகழவேண்டும். ஆமைக்கும் இன்னோர் ஆமைக்கும் அல்லது முயலுக்கும் இன்னோர் முயலுக்கும் போட்டி நடத்தலாம். யாருமே போட்டிக்கு முன்வராதபோது போட்டிக்கு முன்வந்தது ஆமை. போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற அந்தத் துணிச்சலை நான் பாராட்டுகிறேன். எனவே இந்தப் போட்டியில் “ஆமையே வெற்றி பெற்றது என்று தீர்ப்பளிக்கிறேன்” என்று தீர்ப்புச் சொன்னார் சிறுத்தையார்.

ஓட்டப் பந்தயமே நடக்காமல் இப்படி ஒரு முடிவு சொன்னதை அனைத்து விலங்குகளும் ஏற்றுக்கொண்டு ஆரவாரம் செÖதன. போட்டியில் பங்குபெற முன்வரவேண்டும் என்ற அந்த எண்ணமே வெற்றியின் அடிப்படை.

## 9. கை வேலை

தாளைச் சரியாக மடித்துக் கிழிக்கப் பயிற்சி
தாள் உருவங்களான விசிறி, கப்பல், மீன், பூ, மரம் போன்றவைகளை ஆக்கப் பயிற்றுவித்தல்.

## 10. புலப்பயிற்சி

தொலைவில் உள்ள பொருள்களை அடையாளம் காணுதல்
அடையாளம் கண்ட பொருள்களை எடுத்து வருதல்
பல்வேறு ஒலிகளை வாயால் எழுப்பச் செய்தல்
வட்டமாக அமரவைத்து அவர்களில் ஒருவர் ஏதேனும் ஒலி எழுப்ப, அந்த ஒலி எழுப்பியவரை, நடுவில் கண்ணை மூடிக்கொண்டு நிற்பவர் அடையாளம் காட்டச் செய்தல்.
தொலைவில் நிற்கவைத்து பேசச்சொல்லி, பேசியது என்ன என்று கேட்டல்
அருகில் நிற்கவைத்து மெதுவாகப் பேசச்சொல்லி பேசியது என்ன என்றுகேட்டல்
உரத்துப் பேசவைத்து கேட்டதைச் சொல்ல வைத்தல்
காதை மூடிக்கொண்டு கேட்டதைச் சொல்ல வைத்தல்

## 11. கலை பண்பாடு

நடனம்.

ஒற்றைக் காலைத் தூக்கி ஆடும்
வண்ண மயிலே - உன்
உடல் முழுதும் கண்கள் ஏனோ
வண்ண மயிலே.

சுற்றும் முற்றும் பார்ப்ப தேனோ
வண்ண மயிலே - உன்
சின்னக் கொண்டை ஆட்டுதற்கோ
வண்ண மயிலே.

தொங்குந் தோகை விரிப்ப தேனோ
வண்ண மயிலே - இன்பம்
தோன்று வதைக் காட்டத் தானோ
வண்ண மயிலே.

## 12. கையெழுத்து

**ல, வ, ன, ஞ, ண, ள**

எழுத்துகளை உரிய வடிவத்துடன் அழகாக எழுதுவதற்குப் பயிற்சி தருதல்

## நவம்பர்

### 1. ஊக்கப் பாடல்கள்

10.

நெல்லு மூக்குக் குருவியே
நித்தம் எங்கு செல்கிறாÖ?
கடுகு விழிக் குருவியே
காலை எங்கு செல்கிறாÖ?

குட்டையான உடம்பையே
எந்தக் குளத்தில் நனைக்கிறாÖ?
தத்தித் தத்தி விண்ணிலே
தாவிப் பறக்கப் பார்க்கிறாÖ.

நீயும் நானும் நண்பர்கள்
நிதமும் சேர்ந்து மகிழுவோம்
ஓடிவாயேன் குருவியே
ஒன்றாÖ நாமும் பாடலாம்.

11.

கா கா கா கா காக்கையிடம்
காணும் ஒற்றுமை கற்றிடலாம்
கீக்கீ கீக்கீ கிளியிடமோ
கொஞ்சிப் பேசக் கற்றிடலாம்
கூக்கூ கூக்கூ குயிலிடமோ
குரலின் இனிமை கற்றிடலாம்
கொக்கொக் கொக்கொக் கோழியிடம்
குன்றாக் கடமை கற்றிடலாம்
வா வா வா வா பள்ளிக்கு
வந்தால் தமிழைக் கற்றிடலாம்.

### 2. தெளி தமிழ்ச் சொற்கள்

பிறர் உதவியின்றி நானே நடப்பேன் (Help)
வணக்கம் நலமாக இருக்கிறீர்களா? (சவுக்கியமா)
பச்சை வண்ணம் கண்ணுக்கு இனியது (Colour)
வருகைப் பதிவேட்டை எடுத்து வா (Attendence Register)
உங்கள் உடை அருமையாக உள்ளது (Super)

### 3. தமிழ்

எழுதுதல், படித்தல், அடையாளம் காணுதல்

ல், வ், ன், ஞ், ண், ள்

ஊக்கப்பாடல்

படிப்பும் பேச்சும் இயற்றமிழ்
பாடும் பாட்டே இசைத்தமிழ்
நடிப்பும் கூத்தும் சேர்ந்ததே
நாடகத் தமிழ் ஆகுமே.

இயல் இசை நாடகம்
இனிய தமிழில் உள்ளதே
நற்றமிழைக் கற்றுமே
நாடு போற்ற வாழுவோம்.

நுண்பொருள் வேறுபாடு

குளங்களின் வகை

குளிக்கும் நீர்நிலை குளம்
உண்ணும் நீர்நிலை ஊருணி
சிறிய நீர்நிலை குட்டை
பெரிய நீர்நிலை தடாகம்
மலை தரும் நீர்நிலை சுனை
அருவி விழும் நீர்நிலை மடு.

திருக்குறள்

மாணவர்களுக்கு ஏற்புடைய 3 திருக்குறளைத் தேர்வுசெÖது சுவையாகத் தொடர்புடைய கதைகளைக்கூறி கற்பிக்கவும்.

4. கணக்கு

ஏறுவரிசை, இறங்கு வரிசை கற்பித்தல்.

1 லிருந்து 10 வரை ஏறுவரிசை, இறங்குவரிசையைச் செயல் வழியில் கற்பிக்கவும். (தரையில் 10 வட்டங்களை வரிசையாகப் போட்டு ஒவ்வொரு வட்டத்திற்குள்ளும் எண் எழுதிய அட்டையை வைத்து, வட்டத்திற்குள் மாணவரைத் தாண்டச் சொல்லவும். தாண்டிய பிறகு வட்டத்திற்குள் உள்ள எண்ணைக் கூறவேண்டும். எண் அறிமுகமாகும். இதே முறையில் ஏறுவரிசை இறங்குவரிசை கற்பிக்கலாம் )

ஒரு இலக்க எண்கள் கூட்டல்

1. தீக்குச்சி, புளியங்கொட்டை, மணிகளைப் பயன்படுத்தி மாணவர்களை எண்ணச் சொல்லவேண்டும். இரண்டு மாணவர்கள் எண்ணிக் கொண்டுவந்ததை மூன்றாவது மாணவரிடம் தந்து எண்ணச் செÖயவேண்டும்.

2. பல வண்ண மணிகள் கோத்த மாலையில் 10 க்குள் ஒரு எண்

சொல்லி அந்த எண்ணுக்குரிய மணிகளைத் தனியாகக் காட்டவும் எனக் கூறவேண்டும். அவர்கள் காட்டுகிற மணிகளில் 2 பச்சை, 3 மஞ்சள், 2 வெள்ளை இருந்தால் அதைக் கரும்பலகையில் எழுதிக் காட்டி கூட்டல் செயலை எளிமைப்படுத்தலாம்.

3. மருந்தில்லாத தீக்குச்சிகளில் கட்டு உதிரி எனக் கட்டிவைத்துக் கொண்டு எண்ணச் செ-து இரண்டு எண்ணிக்கையைச் சேர்த்து கட்டு உதிரி காட்டச் செÖயலாம்.

4. வேப்பிலையைக் கொடுத்து இரண்டு இரண்டாக இலைகளை எண்ணச்செÖது அதன் தொடர்ச்சியாக இலையில் உள்ள மொத்தச் சிற்றிலைகளைக் கூறச் சொல்லலாம்.

5. பல்லாங்குழி விளையாடுவது கூட்டல்திறனை அதிகரிக்கும்.

6. சூழலில் எளிதில் கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்து கூட்டல்செÖயலாம்.

7. கரும்பலகையிலோ, குறிப்பேட்டிலோ கூட்டல் செÖவதற்கு முன்பு மாணவர்களுக்கு எண்ணும், அதற்கான குறியீடும், எண்ணைப் பொருள்களின்வழி எண்ணிக் காட்டுகிற தன்மையும் வளர்த்த வேண்டும். பிறகு கூட்டல் செயற்பாட்டிற்குச் செல்லவும்.

## 5. சூழ்நிலையியல்

நாÖ, கோழி, பூனை, மீன், ஆடு, மாடு போன்ற வீட்டு விலங்குகளில் ஏதேனும் மூன்றின் வாழ்விடம் பற்றிய அறிமுகம், அது பற்றிய கலந்துரையாடல்.

## 6. விளையாட்டு

பந்து விளையாட்டு.

- பந்தை உருட்டுதல்
- பந்தை வீசிப் பிடித்தல்
- பந்தை இலக்கு நோக்கி எறிதல்
- சிறிய பந்தைக் குழாÖக்குள் போடுதல்
- பெரிய பந்தை வளையத்திற்குள் போடுதல்.

## 7. நடிப்பு

ஆமையும் முயலும் நாடகமாக நடித்தல்

## 8. கதைகூறல்

வ. உ. சிதம்பரனார் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஓட்டப்பிடாரம் ஆகும். இவர் வழக்கறிஞர் உலகநாதருக்கும், பரமாயி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். நாட்டு விடுதலைக்காக வழக்கறிஞர் தொழிலையே துறந்தார். தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையில் ஆங்கிலேயர் வணிகக் கப்பல்களைச் செலுத்திக் கொள்ளைப் பணம் ஈட்டுவதைக் கண்டார். வ.உ.சி. அவர்கள் வெள்ளையருக்கு எதிராகத் தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே குறைந்த கட்டணத்தில் கப்பல் விட்டார். அதனால் ஆங்கில அரசின் சினத்திற்கும் கொடுமைக்கும் ஆளானார். வெள்ளையரின் ஆதிக்கத்தைத் தகர்த்தெறியக் கப்பல் ஓட்டியதால் அவரைத் தளைப்படுத்தியது ஆங்கில அரசு. சிறையில் செக்கு இழுக்கவைத்தது. கல் உடைக்க வைத்தது. கொடிய அடக்கு முறைகளால் பாதிக்கப்பெற்ற வ.உ.சி அவர்கள் இந்திய விடுதலையைக் காணமுடியாத துயரத்தோடு 1930 நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் உயிர் நீத்தார்.

## 9. கைவேலை

வண்ணத்தாளைக் கிழித்து வரைந்த உருவங்கள் மேல் ஒட்டுதல்
வண்ணத்தாளைக் கிழித்து விரும்புகிற உருவங்கள் வடிவில் ஒட்டுதல்
வண்ணத்தாளை எட்டு பகுதியாக மடித்து கத்தரிக்கோலால் வெட்டுதல்

## 10. புலப்பயிற்சி

துவர்ப்பு, காரம், உவர்ப்பு சுவைக்கச் செÖது அறியவைத்தல்.
(துவர்ப்பிற்குப் பாக்கு, காரத்திற்கு மிளகாÖ, உவர்ப்பிற்கு உப்பு பயன்படுத்தவும்)

## 11. கலை பண்பாடு

மாணவர்கள் விரும்புகிற ஆடல் பாடல்களை நிகழ்த்திக் காட்டச் சொல்லவும்.
(திரைப்படப் பாடல்களுக்கான ஆடல்களைத் தவிர்க்கவும்)

## 12. கையெழுத்து

**ல், வ், ன், ஞ், ண், ள்**

உரிய வடிவத்துடனும், அழகாகவும் எழுத ஊக்குவித்தல், பயிற்சி தருதல்.

# டிசம்பர்

## 1. ஊக்கப்பாடல்கள்

12.

குட்டி குட்டி எறும்புகள்
கூட்டம் கூடும் எறும்புகள்
கடுகு போல எறும்புகள்
காலால் நடக்கும் எறும்புகள்.

வரிசை போட்டுச் சென்றிடும்
வழிகொடுத்து ஒதுங்கிடும்
உணவுப் பொருள் தன்னையே
உழைத்து நாளும் சேர்த்திடும்.

சுற்றம் தழுவி நின்றிடும்
சற்றும் அயரா எறும்புகள்
கற்றுக்கொள்ள வேண்டுமே
ஒற்றுமையை நாமுமே.

13. சிலந்தி வலையைப் பாருங்கள்
சின்னஞ் சிறிய பூச்சியே
வளைந்து வளைந்து புதுமையாÖ
வட்ட வலையைப் பின்னுமே

தேனீக்கூட்டைப் பாருங்கள்
திறமையோடு ஒற்றுமை
பேணி வீட்டைக் கட்டுமே
பெரிய முயற்சி வேண்டுமே

குருவிக் கூட்டைப் பாருங்கள்
குடுக்கை போன்று பின்னியே
விரைவில் கட்டி முடிக்குமே
வேண்டும் முயற்சி என்றுமே.

## 2. தெளிதமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| காலம் தாழ்த்தினால் தண்டத்தொகை உண்டு | (Fine) |
| ஒப்பனை செÖய இத்தனை நேரமா? | (அலங்காரம்) |
| சாலை நேர்ச்சிகள் கவனக்குறைவால் நேர்கின்றன | (விபத்து) |
| நல்ல தொடக்கம் பாதி வெற்றி | (ஆரம்பம்) |
| கையூட்டுக் குற்றங்கள் கண்டிக்கத் தக்கன | (லஞ்சம்) |
| இலவசம் என்றால் கையேந்தலாமா? | (ஓசி) |

## 3. தமிழ்

நாயின் ஒலியோ குரைத்தல்
நரியின் ஒலியோ ஊளை
குயிலின் ஒலியோ கூவல்
மயிலின் ஒலியோ அகவல்
கூகை ஒலியோ குழறல்
கிளியின் ஒலியோ மிழற்றல்
ஆந்தை ஒலியோ அலறல்
அரிமா ஒலியோ முழக்கம்
கழுதை ஒலியோ கத்தல்
ஒவ்வொரு ஒலிக்கும் ஒரு பெயர்
தமிழில் உண்டு உரைப்பாÖ.

திருக்குறள்

மலர் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்புடைய ஏதேனும் மூன்று திருக்குறளைச் சுவையாக குறள் கருத்தமைந்து சிறு கதைகளுடன் கூறிக் கற்பிக்கவும்

பழந்தமிழ்ப்பாடல்

நல்லாரைக் காண்பதும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதும் நன்றே.

எழுத்து அறிமுகம்

லா, வா, னா, ஞா, ணா, ளா

எழுத்துகளை எழுதுதல், படித்தல், அடையாளம் காணுதல்

4. கணக்கு

நாணயங்கள் அறிமுகம். உருபா தாள்கள் அறிமுகம். பைசா அறிமுகம்

ஓர் இலக்க எண்கள் கூட்டல் அறிமுகம் மீள்பார்வை, பயிற்சி.

5. சூழ்நிலையியல்

விசையைத் தட்டி விட்டதும்
விளக்குப் பற்றிக் கொள்ளுமாம்
விசையைத் திருப்பி வைத்ததும்
வாÖ திறந்து பேசுமாம்.

விசையை முடுக்கி விட்டதும்
விசிறி நன்கு குழலுமாம்
விசையைக் காதில் வைத்ததும்
விளம்பும் பேச்சுக் கேட்குமாம்.

கம்பிக்குள்ளே செல்லுமாம்
கையில் தொட்டால் கொல்லுமாம்
தம்பி அதன் பேர் மின்சாரம்
தண்ணீர் தந்த விசையாகும்.

6. விளையாட்டு

கயிற்றின் இருமுனைகளையும் குழுவாகப் பிடித்துக்கொண்டு இழுத்தல்
ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு தட்டாமாலை சுற்றுதல்
மணலில் பொருள்களைப் புதைத்து வைத்து எடுத்தல்
பல்லாங்குழியில் சோழிகளைப் போட்டு விளையாடுதல்

7. நடிப்பு

இதுவரை கற்றுக்கொண்ட ஊக்கப் பாடல்களை மெÖபாடுகளுடன் பாடுதல்

8. கதைகூறல்

ஏராளமான அறிவியல் கருவிகளைக் கண்டுபிடித்த தாமசுஆல்வா எடிசன் சிறுவயதில் படிக்க வழியில்லாது நாளிதழ் விற்றுக்கொண்டிருந்தார். தொடர் வண்டியில் அவரது இருப்பிடமும், விற்பனையும் அமைந்தன. ஓடுகிற தொடர் வண்டியிலேயே அவரது ஆராÖச்சிச் சாலையும் இருந்தது. ஒருநாள் வண்டியின் ஓட்டத்தில் பெட்டிகள் ஆடியபொழுது அவரது ஆராÖச்சிக்கான வேதிப்பொருள் கீழே விழுந்து தீப்பிடித்தது. தொடர்வண்டிப் பெட்டியில் தீப்பிடித்தது கண்டு சினம்கொண்ட நடத்துநர் ஓடிவந்து எடிசனை ஓங்கிக் கன்னத்தில் அறைந்தார். அவரையும் அவரது அனைத்துப் பொருள்களையும் தொடர்வண்டியிலிருந்து தூக்கி வீசி எறிந்தார். நடத்துநர் வேகமாக அறைந்ததனால் எடிசனது காது செவிடாகியது. செவிடாகிய அவர் கண்டிபிடித்ததுதான் நாம் இப்பொழுது கேட்கும் இசைக்கு அடித்தளமாக இருக்கிற "இசைத்தட்டு" ஆகும். அதுமட்டுமா இவர் நகரும் படக்காட்சியையும் ஆக்கினார். இன்று நாம் காணுகிற திரைப்படத்திற்கு இதுவே முன்னோடி ஆகும். ஒரு காட்சியை 158 கண்ணாடித் தகடுகளில் தொடர்படமாக வரைந்து அதை ஒரு பெட்டிக்குள் வைத்து முறையாகச் சுழலவைத்துப் படங்கள் நகருவது போன்ற தோற்றத்தை உருவாக்கிக் காட்டினார். நகரும் படங்கள், மின்சார விளக்கு என இவர் ஏராளமாகக் கண்டறிந்துள்ளார். இளம் மழலைகளாகிய நாமும் இவரைப்போல புதிய புதிய கண்டுபிடிப்புகளை ஆக்கவேண்டியது இன்றியமையாததல்லவா?

9. கை வேலை

தேங்காÖ நாரால் பொம்மைகள் செÖதல்

10. புலப் பயிற்சி

மல்லிகை, பூண்டு, வெங்காயம் போன்றவைகளைத் தனித்தனியாகக் கசக்கி மாணவர்கள் மூக்குக்கு நேரே காட்டி மோந்து பார்த்து உணரவைத்தல். கண்ணைத் துணியால் கட்டிக் கொண்டு மோந்து பார்த்து அடையாளம் காட்டப் பயிற்றுவித்தல்.

11. கலை பண்பாடு - மீள் பார்வை -

12. கையெழுத்து

லா, வா, னா, ஞா, ணா, ளா

எழுத்துகளை உரிய வடிவத்துடன் அழகாக எழுதப்பயிற்சி தருதல்

டிசம்பர் இறுதி வாரத்தில் அரையாண்டுத் தேர்வு நடைபெறும்

## சனவரி

### 1. ஊக்கப் பாடல்கள்

14. வானம் கருத்தது முகிலும் பொழிந்தது  மழை மழை மழை
மேனி நனைந்தது குளங்கள் நிறைந்தன  மழை மழை மழை
மின்னல் கீற்றுகள் இடி முழக்கங்கள்  மழை மழை மழை
இன்னல் தீர்ந்தது எங்கும் குளிர்ந்தது  மழை மழை மழை

மப்பு மந்தாரம் மஞ்சின் மூட்டம்  மழை மழை மழை
தொப்பரையாÖ உடை முற்றும் நனைந்தது  மழை மழை மழை
இறங்கிய நீர்ச்சரம் ஏழையின் கண்ணீர்  மழை மழை மழை
உறங்கிய உலகம் உயிர்த்தெழ இங்கே  மழை மழை மழை.

15. பட்டாம் பூச்சி போலவே
பறந்து திரிய வேண்டுமே
சிட்டுக் குருவி போலவே
சிறகு விரிக்க வேண்டுமே

வண்ணக் கிளியைப் போலவே
வானில் பறக்க வேண்டுமே
எண்ணம் போகும் இடமெல்லாம்
எழுந்து பறக்க வேண்டுமே

சின்ன மீன்கள் போலவே
நீரில் நீந்த வேண்டுமே
மின்மினிகளைப் போலவே
மின்னிப் பறக்க வேண்டுமே.

### 2. தெளி தமிழ்ச் சொற்கள்

சினமே உனக்குப் பெரிய எதிரி (கோபம்)
விரைவாக நீயும் நடந்து வா (சீக்கிரம்)
பிறந்தநாள் வாழ்த்துக் கிடைத்ததா? (Birthday)
உறக்கம் கலைந்தது (Sleep)
படுக்கையிலிருந்து எழுந்திரு (Bed)

### 3. தமிழ்

அம்மா மிகவும் நல்லவர்
ஆட்டித் தூங்கச் செÖதவர்
இளைக்கக் கண்டு அழுதவர்
ஈ யை ஓட்டி நின்றவர்

உழக்கு நெÖயைச் சோற்றிலே
ஊற்றிப் பிசைந்து கொடுத்தவர்
எடுத்துத் தூக்கி அணைத்தவர்
ஏணை கட்டிப் போட்டவர்
ஐயன் அப்பன் என்றவர்
ஒப்பனைகள் செÖதவர்
ஓயாதென்னைக் காப்பவர்
ஔவைக் கதையைச் சொன்னவர்.

திருக்குறள்

மாணவர்களுக்கு ஏற்புடைய 3 திருக்குறளைக் கற்பித்தல்.

கிணறு வகை

வெட்டப்பட்ட நீர்நிலை கிணறு
மணலான கிணறு கேணி
சுற்றுச் சுவரில்லாத கிணறு துரவு
மிகச் சிறிய கிணறு கூவல்.

எழுத்து அறிமுகம்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ

எழுத்துகள் எழுதுதல், படித்தல், அடையாளம் காணுதல்

4. கணக்கு

வார நாள்கள் அறிமுகம் ( அறிவன், காரி )

ஓர் இலக்க எண்கள் கழித்தல்

கழித்தல் அறிமுகம்
மொத்தமாக உள்ள விதைகளில் இரண்டு எடுத்தல் ( கழித்தல் ) அறிமுகம்
9 மணிகளில் குறிப்பிடுகிற மணிகளை எடுத்துவிட்டு எண்ணுதல்
9 பாசிகளில் 3 பாசிகளை எடுக்க மீதி 6 பாசிகள் (கழித்தல்) (9 - 3 = 6)

5. சூழ்நிலையியல்

ஆறு, குளம், கிணறு என நீர்நிலைகளைப் பற்றி விளக்குதல். மாணவர்களது சூழலிலுள்ள நீர்நிலைகள் பற்றி உரையாட வைத்தல். இயலுமாயின் ஏதேனும் ஒரு நீர்நிலைக்கு அருகில் கொண்டு சென்று விளக்குதல் அல்லது படம் காட்டி விளக்குதல்.

6. விளையாட்டு

படி மீது ஏறுதல், ஏணி மீது ஏறுதல், கயிற்றேணியில் ஏறுதல்
சாக்கைக் காலில் கட்டிக்கொண்டு நடக்கப் பயிற்சி

7. நடிப்பு

அப்பம் பகிர்ந்த குரங்கு நடித்தல்

8. கதை கூறல்

புகழேந்தி ஒழுக்கமும் கல்வியறிவும் நிறைந்த சிறுவன். இவன் நாகதுறை என்னும் கிராமத்தில் கடற்கரைப்பகுதியில் பெற்றோருடன் வாழ்ந்து வந்தான். அவ்வூர்ப் பள்ளியில் புகழேந்தி மூன்றாம் வகுப்பில் படித்து வந்தான். இவனது கிராமம் கடற்கொந்தளிப்பினால் பலமுறை அழிக்கப்பட்டது. எனவே அக்கிராமத்தைச் சுற்றிலும் கற்சுதையினால் பெரிய பாதுகாப்புச் சுவர்அமைக்கப்பட்டிருந்தது. கடல் கொந்தளிப்பினால் பல மக்கள் அடித்துச் செல்லப்பட்டதாகவும், கிராமத்தினுள் கடல்நீர் பாÖவதனால் வயல்கள், தோட்டங்கள், ஆடு மாடுகள் அழிக்கப்பட்டதாகவும் பலர் கூறியதைக் கேள்விப்பட்டிருக்கிறான் புகழேந்தி.

கடல் தொழிலை நம்பியிருந்த மக்கள் மட்டுமே அக்கிராமத்தை விட்டு இடம்பெயராமல் வாழ்ந்து வந்தனர். ஊருக்கு நடுவில் உள்ள பள்ளிக்குச் சென்று நண்பர்களுடன் வீடு திரும்பினான் புகழேந்தி. அன்று மழையும் காற்றும் பலமாக அடித்தது. மரங்கள் பேயாட்டம் ஆடின. பறவைகள் அபயக் குரலெழுப்பி திசைமாறிப் பறந்தன. நண்பர்களுடன் வேகமாக வீடு நோக்கி ஓடினான் புகழேந்தி. இவனது வீடு சற்றுத் தூரத்தில் உள்ளதால் தனியாகப் பயந்து பயந்து ஓடிச் சென்றான். கடலின் பலமான கொந்தளிப்பும், காற்றின் ஓசையும் மழையும் அக்கிராமத்தையே அதிர வைத்தன. மனதில் உறுதியை வரவழைத்துக் கொண்டு நடந்தான். சிறிது தூரம் சென்றதும் அந்த மதில் சுவரிலிருந்து நீர் சீறிப் பாÖவதைக் கண்டான். கடலின் கொந்தளிப்பினால் ஏற்பட்ட துளையில் கடல் நீர் பாÖந்தது. அதைக் கண்டதும் தன் கிராமமே அழியப் போகிறது என்று நடுங்கினான்.

அம்மா அம்மா என்று உரக்கக் குரல் கொடுத்தான். யாருமே உதவிக்கு வரவில்லை. அங்கே கிடந்த இலை, தழைகளால் துளையை அடைத்தான். சிறிது நேரத்தில் மீண்டும் நீர் பாÖந்தது. தனது சட்டையைக் கழற்றித் துளையில் திணித்தான். புத்தகங்களால் அழுத்திப்பிடித்தான். முடியவில்லை. சிந்தித்துப் பார்த்தான். பின்பு கால்களை ஊன்றிக்கொண்டு தன் முதுகுப் பகுதியால் துளையை அழுத்திப் பிடித்தான். நீர் பாÖவது தடுக்கப்பட்டது. அப்படியே அழுத்திப் பிடித்தபடி உரக்கக் குரல் கொடுத்தான். யாருமே வரவில்லை. நன்றாக இருட்டியும் அவன் அவ்விடத்தை விட்டு நகரவில்லை.

சிறிது நேரத்தில் தாயும் ஊர் மக்களும் கைவிளக்குடன் தேடிக்கொண்டு வருவது கண்டு உரக்கக் குரல் கொடுத்தான். தாÖ ஓடிவந்து மகனைத் தழுவிக் கொண்டாள். ஊர் மக்களால் துளை கண்டு பிடிக்கப்பட்டு உடனே அடைக்கப்பட்டது. ஊரும் காப்பாற்றப்பட்டது. மறுநாள் பள்ளிக்கூடத்தில் ஊர் மக்களும், ஊர்த் தலைவரும் ஒன்றுகூடிப் புகழேந்தியைப் பாராட்டி நாடுகாத்த சிறுவன் என்று புகழ்ந்தனர். புகழேந்தியைப் போல நீங்களும் நாட்டைக் காக்கச் செயற்பட வேண்டுமல்லவா?

## 9. கை வேலை

வண்ண வண்ணத் துண்டுத் துணிகளைக் கொண்டு பொம்மைகள் செΌதல்
பஞ்சால் பொம்மைகள் செΌதல்

## 10. புலப் பயிற்சி

மென்மை, கடினம் வேறுபாட்டினைக் கண்ணை மூடிக்கொண்டு தொட்டுப்பார்த்து அடையாளம் காணுதல் ( மென்மை எடுத்துக்காடு சுண்ணக்கட்டி, கடினம் கல் )

கூர்மை, மொண்ணை வேறுபாட்டினைக் கண்ணை மூடிக்கொண்டு தொட்டுப் பார்த்து அடையாளம் காணுதல்.

## 11. கலை பண்பாடு

நாட்டியம்.

ஆடு பாம்பே வளைந்தாடு பாம்பே
அனைத்தும் தமிழ் ஆகுமென்று ஆடுபாம்பே - இங்கே
அனைத்தும் தமிழ் ஆகுமென்று ஆடுபாம்பே.

ஆட்சிமொழி பயிற்றுமொழி தமிழ்நாட்டில்
ஆலையத்து மொழியதுவும் தமிழ்நாட்டில்
பேச்சுமொழி எழுத்துமொழி அத்தனையும்
பேரிடிபோல் ஆனதிங்கே தமிழ்நாட்டில் (ஆடுபாம்பே)

எத்தனையோ மொழிக்கலப்பு இருக்குதிங்கே - அந்த
எத்தர்களின் செயற்பாடோ பெருகுதிங்கே
அத்தனையும் உடைத்துத் தமிழ் வளர்த்திடவே - நீ
அனைத்துத் தமிழ்ப் பள்ளியிலே ஆடுபாம்பே.
(ஆடுபாம்பே)

## 12. கையெழுத்துப் பயிற்சி

அ, ஆ, இ, ஈ, உ, ஊ

உரிய வடிவத்துடன் அழகாக எழுதப் பயிற்சி அளித்தல்.

## பிப்ரவரி

### 1. ஊக்கப் பாடல்கள்

16. இரும்புத் துண்டு கிடந்தது
எடுத்து வீசி எறிந்தனர்.
கருமான் ஒருவன் கண்டனன்
காÖச்சிக் கத்தி செÖதனன்
எலும்புத் துண்டு கிடந்தது
எடுத்தெறிந்து சென்றனர்
எலும்புக்காரன் கண்டனன்
எடுத்துப் பிடிகள் செÖதனன்.
தகரம் ஒன்று கிடந்தது
தூக்கி வீசி எறிந்தனர்
தகரக்காரன் கண்டனன்
தகரக் குவளை செÖதனன்
துரும்பும் நமக்குப் பயன்படும்
தோன்றும் பொருள்கள் யாவுமே
அறிந்துள்ளார்க்குப் பயன்படும்
அறிவில்லார்க்குப் பயனில்லை.

### 2. தெளிதமிழ்ச் சொற்கள்

| | |
|---|---|
| இறப்புச் செÖதி வருத்தமானது. | ( Death ) |
| வளமனை வீடு பார்க்க அழகாÖ இருக்கும் | ( Bunglow ) |
| கடை திறந்திருக்கிறது. | ( Shop ) |
| அப்பாவுக்கு இரவு வேலை முறை | ( Night shift ) |
| சுற்றுச் சுவர் பாதுகாப்புத் தரும் | ( Compound ) |

### 3. தமிழ்

எழுத்து அறிமுகம்

எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஃ

எழுத்துகள் எழுதுதல், படித்தல், அடையாளம் காணுதல்

திருக்குறள்

மாணவர்களுக்கு ஏற்புடைய 3 திருக்குறளைக் கற்பித்தல்.

பழந்தமிழ்ப் பாடல்

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி.

## 4. கணக்கு

ஓரிலக்க எண் கூட்டல், கழித்தல் பயிற்சி, மீள்பார்வை

## 5. சூழ்நிலையியல்

கணிப்பொறியாம் கணிப்பொறி
கணக்குப்போடும் கணிப்பொறி
மணித்துளியில் நூறுவகை
மாற்றம் செய்யும் கணிப்பொறி
அச்சு வேலை செய்யலாம்
அழகுப் பொம்மை போடலாம்
வேண்டும் பொழுது மகிழ்ந்திட
விளையாட்டும் ஆடலாம்
அறிவு உலகின் நுட்பங்கள்
அறிய இதனைக் கண்டனர்
இளைய தம்பி இதனை நீ
இயக்க இன்றே பழகிடு.

சூரியன், ஞாலம், நிலவு, விண்மீன் ( உடுக்கள் )
பற்றிய கருத்தினை படங்கள், துணைக்கருவிகள் வழியாக விளக்குதல்.

## 6. விளையாட்டு

கைகளும் கால்களும் கீழே பட நடத்தல்
தொடர் வண்டி விளையாட்டு
கண்ணைக் கட்டிக்கொண்டு தேடுதல் விளையாட்டு.

## 7. நடிப்பு

இயல்பாக மாணவர்கள் விரும்புகிற கதைக்கான நடிப்பை ஆக்கச் செய்யவும்.

8. கதை கூறல்

ஆடு ஒன்று பிறரை அச்சுறுத்துவதற்காகப் புலித்தோலைப் போர்த்துக் கொண்டது. நெஞ்சு நிமிர்த்தி நடந்தது, புலித்தோலைப் போர்த்திய ஆட்டைக்கண்டு அனைத்து விலங்குகளும் பயந்து வழிவிட்டு ஒதுங்கி நின்றன. காட்டுவழியே சென்றுகொண்டிருந்த அந்த ஆட்டிற்குப் பசி எடுத்தது. சுற்றும் முற்றும் பார்த்தது. கீழே பசுமையாக வளர்ந்துள்ள புல்லைத் தின்னலாம் என்ற விருப்பில் அமைதியோடு அந்த இடத்தில் நின்றது. அப்பொழுது அந்த வழியாக வந்து ஓநாÖ ஒன்று புலித்தோல் மாட்டிய ஆட்டைக் கண்டு மரியாதையோடு வணக்கம் சொன்னது. பசி மயக்கத்தில் இருந்த ஆட்டிற்குத் தான் புலித்தோலைப் போர்த்தி இருக்கிறோம் என்ற எண்ணமே மறந்து விட்டது. ஓநாயைக் கண்டு நடுங்கியது. ஓநாயிடமிருந்து தப்புவதற்காக ஓடத் தொடங்கியது. அப்பொழுது உடம்பின்மீது போர்த்தியிருந்த புலித்தோல் கீழே விழுந்தது. இதைப்பார்த்த அனைத்து விலங்குகளும் ஆட்டை நோக்கி ஓடிவந்து தாக்கின. ஏமாற்ற நினைத்த ஆடு கீழே விழுந்தது.

9. கைவேலை

ஊசியில் நூல் கோத்தல்

நூலால் ஓவியம் வரைதல் ( நூலில் வண்ணத்தைத் தோÖத்து குறிப்பேட்டிற்குள் வைத்து, குறிப்பேட்டை அழுத்திப்பிடித்துக்கொண்டு, நூலின் முனையைப் பிடித்து இழுத்தால் குறிப்பேட்டில் நூல் இழுபட இழுபட வண்ணம் பரவி அழகிய ஓவியம் வரும் )

10. புலப்பயிற்சி

ஓர் ஏனத்திலிருந்து மற்றொரு ஏனத்திற்குத் தண்ணீரையும் மணலையும் - குறிப்பிடுகிற அளவிற்குச் சரியாக ஊற்றப் பயிற்றுவித்தல்.

அளவுக் கட்டைகளை அடுக்குதல், ஒரே அளவுள்ள, வெவ்வேறு அளவுள்ள கட்டைகளை மாணவர்கள் அடுக்கி அழகிய வடிவங்கள் ஆக்க ஊக்குவித்தல்.

11. கலை பண்பாடு

நாட்டியம் திருப்புதல்

12. கையெழுத்துப் பயிற்சி

எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஃ

மேலேயுள்ள எழுத்துகளை உரிய வடிவத்துடன் அழகாக எழுதப்பயிற்சி அளித்தல். மாணவர்கள் அழகாக எழுதவும், சரியாக அடையாளம் காணவும் கற்றுக்கொண்டார்கள் என்றால் அவர்களது ஏற்புத்திறனுக்குத் தகுந்தவாறு அடுத்த எழுத்தைக் கற்பிக்கத் தொடங்கலாம். வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும், இங்கு தரப்பட்டுள்ள எழுத்துகளை முழுமையாக முடித்தாலே போதுமானது. விரைவாகக் கற்கும் மாணவர்களுக்கு அடுத்த எழுத்தைக் கற்பிக்கத்தொடங்கலாம் அல்லது குழுத்தலைவராக்கிப் பிறருக்குப் பயிற்சிதரச் செ-யலாம்.

நண்பர்களிடமிருந்து கற்றுக்கொள்கிற இந்த முறை மிகுந்த பயனளிக்கும்.

மார்ச்சு

1. ஊக்கப் பாடல்

17.

பந்தைத் தூக்கிப் போடு
பசிக்கப் பசிக்க ஆடு
மூச்சை இழுத்துப் பழகு
முகத்தில் தோன்றும் அழகு
நீளம் உயரம் தாண்டு
நீ வளர்வாÖ நீண்டு
நாளும் நீரில் நீந்து
நல்ல மார்பை ஏந்து
முன்னும் பின்னும் வளை
முகத்தில் தோன்றும் களை
மாலை வெÖயில் குளி
மடிமை என்றும் ஒழி.

18.

மாம்பழமாம் மாம்பழம்
மஞ்சள்நிற மாம்பழம்
மாமரத்து மாம்பழம்
மாமாதந்த மாம்பழம்
எங்கள் வீட்டு மாம்பழம்
எங்கள் நாட்டு மாம்பழம்
தாÖநாட்டு மாம்பழம்
தமிழ்நாட்டு மாம்பழம்.

2. தெளிதமிழ்ச் சொற்கள். திருப்புதல்

3. தமிழ் திருப்புதல்

4. கணக்கு திருப்புதல்

5. சூழ்நிலையியல் திருப்புதல்

6. விளையாட்டு

எம்பிக் குதித்துப் பழம் பறிக்கும் விளையாட்டு.

சறுக்கல் விளையாட்டு. ( சறுக்கல் பலகை செÖது சறுக்கலாம், பைஞ்சுதை, அல்லது தகரம் பயன்படுத்திச் சறுக்கு விளையாட்டு வடிவமைத்துக் கொள்ளலாம் )

மரம் ஏறுதல் விளையாட்டு. மழலைகளை ஈர்க்கிற வேறு ஏதேனும் விளையாட்டு இருப்பின் விளையாடிப் பார்த்துப் பதிவுசெÖது கொள்ளவும்.

7. நடிப்பு திருப்புதல்

8. கதை கூறல் இல்லை.

9. கைவேலை

கல், புளியங்கொட்டை, விதைகள் பயன்படுத்தி உருவங்கள் ஆக்கச்செÖதல்.
சுற்றுப்புறத்தில் கிடைக்கிற பொருள்களைத் தொகுத்தல், வகைப்படுத்துதல்.

10. புலப்பயிற்சி

வரிவடிவ வண்ணப் படங்களை பத்து துண்டுகளாக வெட்டி, பொருத்தச்செÖதல்.
புகைப்படங்களை ஐந்து துண்டுகளாக வெட்டி பொருத்தச் செÖதல்.

11. கலை பண்பாடு — திருப்புதல்

12. கையெழுத்துப் பயிற்சி — திருப்புதல்.

## ஏப்ரல்

இதுவரை கற்றுக்கொண்ட எழுத்துகளை பயிற்சி செÖதல்.
எண்களை மீள்பார்வை செÖதல். திருப்புதல் என்பது முழுப்பாடத்தையும் ஒரு மேலோட்டமான பார்வையின்வழி அடைந்த அடைவுகளை மதிப்பீடு செÖது, மதிப்பெண் குறைந்து இருந்தால் மீள்பார்வை செÖதல்

**ஏப்ரல் முழுஆண்டுத் தேர்வு**

எழுத்துகளைப் பலுக்கும் முறை ( உச்சரிக்கும் முறை )

ண, ள, ட ஆகியவை மடிநா ஒலிகள்.
இவற்றைப் பலுக்க நாக்கை மடித்து மேல் வாÖப் பகுதிகளில் வருடவேண்டும்

ன, ல, ற ஆகியன நுனி நா ஒலிகள்.
இவற்றைப் பலுக்க நாக்கு நுனியால் மேல்வாÖப் பகுதியைத் தொடவேண்டும்.

த, ந ஆகியவை மேற்பல்லின் அடியில் நாக்கு நுனி பொருந்தப் பிறக்கும்.

ழ சிறப்பு ழகரம் நாக்கை மடித்து மேலண்ணத்தைத் தொட்டு எடுத்தல்

இவ்வெழுத்துகளை வேறுபட ஒலிக்கும் முறையைத் தொடக்கநிலையிலேயே தெளிவாகக் கற்பிக்கவேண்டும். பலமுறை பலுக்கச் செÖது பயிற்றவேண்டும்.